අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/3/37/3/9/441 | ඔබේ අංකය / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2024.01. 29

சுற்றறிக்கை இலக்கம்: 01/2024

அனைத்து: மாகாண பிரதம செயலாளர்கள்,
மாகாண கல்வி செயலாளர்கள்,
மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்ட பொறுப்பு கல்வி பிரதி/உதவி பணிப்பாளர்களுக்கு

**பாடசாலைகளில் கல்விசார் ஊழியர்களை ஆட்சேர்த்தல், இடநிலைப்படுத்தல் மற்றும் இடமாற்றங்களை முறைமைப்படுத்தலுக்காக பாடசாலைகளை வகைப்படுத்தல்**

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பின் ஒழுங்குவிதிகள் மற்றும் தேசிய இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவைக்காக வசதி அடிப்படையிலான பாடசாலைகளை வகைப்படுத்தல் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட 2005/01 மற்றும் 2005.01.18 திகதியிட்ட கல்விச் செயலாளரின் சுற்றறிக்கை மற்றும் கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆசிரியர்களை பகிர்வதை ஊக்குவிப்பதற்காக நிதிசார் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக பாடசாலைகளை கஷ்ட மற்றும் அதிகஷ்ட பாடசாலைகள் என வகைப்படுத்துதல் என்ற தலைப்பில் இலக்கம் 2006/43 மற்றும் 24.11.2006 திகதி கல்விச் செயலாளரின் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதுடன் இந்த சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளை இதன் பின் வலுவில் இருக்கும்.

2.0 கல்விச் செயலாளரின் சுற்றறிக்கை இலக்கம் 2007/20 மற்றும் 13.12.2007 திகதிய சுற்றறிக்கையின்படி தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் கல்விச் செயலாளரின் இலக்கம் 2006/44 மற்றும் 27.11.2006 தேதியிட்ட சுற்றறிக்கையின்படி கஷ்ட மற்றும் அதிகஷ்ட பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவை செலுத்துவதற்காக பாடசாலைகளை வகைப்படுத்துதல் 05.02.2024 முதல் நடைமுறைப்படுத்தலானது இந்த சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும்.

3.0 மாகாண மட்டத்தில் நிலவும் பிரதேச, புவியியல், பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளைக் கருத்தில் கொண்டு, கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பிள்ளைகளுக்கு சமமான கல்வி அணுகல் வாய்ப்புகளையும் பண்புத் தரத்துடன் கூடிய கல்வி வாய்ப்புகளையும் வழங்கும் நோக்கத்துடன் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, ஆசிரியர்களைத் தக்கவைத்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு இன்றி தொடர்ச்சியாக மேற்கொள்வதூடாக பாடசாலை முறைமையை முனைப்புடன் இயங்கச் செய்வதற்காக இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

4.0 இதன் கீழ், பாடசாலைகளிலுள்ள பல்வேறு பௌதீக வசதிகள் மற்றும் கல்விசார் பணிக் குழுவினரின் இடநிலைப்படுத்தலின் இலகு கருதி பின்வருமாறு பாடசாலைகளை வகைப்படுத்தப்பட வேண்டும்.

i. அதிகஷ்ட பாடசாலைகள்
ii கஷ்ட பாடசாலைகள்
iii. வசதியான பாடசாலைகள்
iv. மிக வசதியான பாடசாலைகள்

**5.0 பாடசாலைகளை வகைப்படுத்துவதற்கான நியதிகளின்படி புள்ளிகளை வழங்குதல்**

5.1 பாடசாலைகளின் வகைப்படுத்தலின் போது, வலய/மாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கு புள்ளிகள் வழங்குவதில் பயன்படுத்தப்படும் நியதிகள் மற்றும் வழங்கப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை கீழே உள்ள அட்டவணை இலக்கம் 1 இல் காட்டப்பட்டுள்ளது.

| தொடர் இல. | | | | நியதி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1. | | | | **பாடசாலையில் காணப்படும் அடிப்படை வசதிகள்** | 17 |
| | 1.1 | | | மின்சார வசதி காணப்படுதல் (இலங்கை மின்சார சபை அல்லது வேறு பொருத்தமான மூலம் ஒன்றிலிருந்து) | (02) |
| | | 1.1.1 | | மின்சார வசதி காணப்படுகிறது | 00 |
| | | 1.1.2 | | மின்சார வசதி காணப்படுவதில்லை | 02 |
| | 1.2 | | | இலக்கம் 24.˙.2016 மற்றும் 06.09.2016 திகதிய சுற்றறிக்கை மற்றும் பாடசாலை திட்டமிடல் குறித்த வழிகாட்டல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தரநிலைகளின்படி போதுமான சுகாதார வசதிகள் காணப்படல் | (05) |
| | | 1.2.1 | | தேசிய தரநிலைகளின்படி சுகாதார வசதிகள் 100மூ காணப்படல் | 00 |
| | | 1.2.2 | | தேசிய தரநிலைகளின்படி சுகாதார வசதிகள் 75மூ -100மூ காணப்படல் | 01 |
| | | 1.2.3 | | தேசிய தரநிலைகளின்படி சுகாதார வசதிகள் 50மூ -75மூ காணப்படல் | 02 |
| | | 1.2.4 | | தேசிய தரநிலைகளின்படி சுகாதார வசதிகள் 25மூ - 50மூ காணப்படல் | 03 |
| | | 1.2.5 | | தேசிய தரநிலைகளின்படி சுகாதார வசதிகள் 25மூ க்கு குறைவாக காணப்படல் | 05 |
| | 1.3 | | | பாடசாலையில் குடிநீர் வசதி காணப்படுதல் | (05) |
| | | 1.3.1 | | ஆண்டு முழுவதும் சீரான நீர் வசதி கிடைக்கிறது.. | 00 |
| | | 1.3.2 | | 6 மாதங்களுக்கும் அதிகமாக நீர் வசதி கிடைக்கிறது. | 02 |
| | | 1.3.3 | | 3 முதல் 6 மாதங்கள் வரை நீர் வசதி கிடைக்கிறது | 03 |
| | | 1.3.4 | | 3 மாதங்களுக்கும் குறைவான நீர் வசதி கிடைக்கிறது. | 05 |
| | 1.4 | | | குடிநீர் அல்லாத பிற தேவைகளுக்கு நீர் வசதிகள் காணப்படுதல | (05) |
| | | 1.4.1 | | ஆண்டு முழுவதும் சீரான நீர் வசதி கிடைக்கிறது.. | 00 |
| | | 1.4.2 | | 6 மாதங்களுக்கும் அதிகமாக நீர் வசதி கிடைக்கிறது. | 02 |
| | | 1.4.3 | | 3 முதல் 6 மாதங்கள் வரை நீர் வசதி கிடைக்கிறது | 03 |
| | | 1.4.4 | | 3 மாதங்களுக்கும் குறைவான நீர் வசதி கிடைக்கிறது. | 05 |
| | 1.5 | | | உணவு மற்றும் பான வசதிகள் காணப்படுதல் | (03) |
| | | 1.5.1 | | பிரதான வேளைக்கான உணவை பெற்றுக்கொள்ளக்கூடிய பாடசாலை உணவகம் உண்டு | 00 |
| | | 1.5.2 | | பாடசாலை உணவகத்தில் பிரதான வேளைக்கான உணவை பெறும் வசதியில்லை | 03 |
| 2. | | | | **பாடசாலையில் அல்லது பிரதேசத்தில் உள்ள தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி மற்றும் இணையம்).** | 10 |
| | 2.1 | | | பாடசாலையில நிலையான தொலைபேசி மற்றும் இணைய வசதிகள் காணப்படல் | (02) |
| | | 2.1.1 | | நிலையான தொலைபேசி வசதிகள் | |
| | | | 2.1.1.1 | நிலையான தொலைபேசி வசதி உள்ளது | 00 |
| | | | 2.1.1.2 | நிலையான தொலைபேசி வசதி இல்லை | 01 |
| | | 2.1.2 | | நிலையான இணைய வசதிகள் | |
| | | | 2.1.2.1 | இணைய வசதி உள்ளது | 00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 2.1.2.2 | இணைய வசதி இல்லை | 01 |
| | 2.2 | கையடக்க தொலைபேசி/ இணைய சமிக்ஞை வசதி காணப்படல் | | | (08) |
| | | 2.2.1 | கையடக்க தொலைபேசி சமிக்ஞை வசதி காணப்படல் | | |
| | | | 2.2.1.1 | கையடக்க தொலைபேசி சமிக்ஞை வசதி உள்ளது | 00 |
| | | | 2.2.1.2 | எந்தவொரு கையடக்க தொலைபேசி சமிக்ஞை வசதியும் இல்லை | 04 |
| | | 2.2.2 | இணைய சமிக்ஞை வசதிகள் காணப்படல் | | |
| | | | 2.2.2.1 | இணைய சமிக்ஞை வசதி உள்ளது | 00 |
| | | | 2.2.2.2 | எந்தவொரு இணைய சமிக்ஞை வசதியும் இல்லை | 04 |
| 3. | **பொது போக்குவரத்து வசதிகள** | | | | **30** |
| | 3.1 | பாடசாலையிலிருந்து அருகிலுள்ள பேருந்து பாதை அல்லது ரயில் நிலையத்திற்கான தூரம் | | | (10) |
| | | 3.1.1 | பொதுப் போக்குவரத்து வசதிகளின் முடிவிடத்திலிருந்து கி.மீ. 1ஐ விட குறைவான தூரத்தில் பாடசாலை அமைந்துள்ளது | | 00 |
| | | 3.1.2 | பொதுப் போக்குவரத்து வசதிகளின் முடிவிடத்திலிருந்து கி.மீ. 1 இற்கும் க்.மீ 2 இற்கும் இடையில் பாடசாலை அமைந்துள்ளது | | 02 |
| | | 3.1.3 | பொதுப் போக்குவரத்து வசதிகளின் முடிவிடத்திலிருந்து கி.மீ. 2 இற்கும் கீ.மீ 4 இற்கும் இடையில் பாடசாலை அமைந்துள்ளது | | 04 |
| | | 3.1.4 | பொதுப் போக்குவரத்து வசதிகளின் முடிவிடத்திலிருந்து கி.மீ. 4 இற்கும் கீ.மீ 6 இற்கும் இடையில் பாடசாலை அமைந்துள்ளது | | 08 |
| | | 3.1.5 | பொதுப் போக்குவரத்து வசதிகள் முடிவில் இருந்து கி.மீ. 6க்கும் மேற்பட்ட தொலைவில் பாடசாலை அமைந்துள்ளது | | 10 |
| | 3.2 | பொதுப் போக்குவரத்து வசதிகள் முடிவிடத்திலிருந்து பாடசாலைக்கு பிரவேசிக்கும் பாதையின் தன்மை (பாடசாலையானது 1 கி.மீ.க்கு அதிகமான தொலைவில் அமைந்திருக்க வேண்டும்.) | | | (10) |
| | | 3.2.1 | மோட்டார் வாகனத்தில் செல்லக்கூடிய பாதை | | 00 |
| | | 3.2.2 | மோட்டார் வாகனத்தில் செல்ல முடியாத குண்டும் குழியுமான பாதை | | 05 |
| | | 3.2.3 | படிகள்/மலைகள் / மரக்கட்டைப் பாலம்/ மேடு பள்ளங்களுடன் கூடிய கடினமான பாதை | | 10 |
| | 3.3 | பாடசாலை தொடங்கும் நேரத்திற்கு முன் ஒரு மணி நேரத்திற்குள் பொது போக்குவரத்து வசதியுள்ளமை | | | (05) |
| | | 3.3.1 | பொதுப் போக்குவரத்து வசதிகள் 04 தடவைக்கு மேல் கிடைக்கும் | | 00 |
| | | 3.3.2 | பொது போக்குவரத்து வசதிகள் 01 - 04 தடவை வரை மட்டுமே கிடைக்கும் | | 02 |
| | | 3.3.3 | பொது போக்குவரத்து வசதிகள் 01 தடவை மட்டுமே கிடைக்கும் | | 03 |
| | | 3.3.4 | பொது போக்குவரத்து வசதிகள் இல்லாமை | | 05 |
| | 3.4 | பாடசாலை முடிந்த ஒரு மணி நேரத்திற்குள் பொது போக்குவரத்து வசதியுள்ளமை | | | **(05)** |
| | | 3.4.1 | பொதுப் போக்குவரத்து வசதிகள் 04 தடவைக்கு மேல் கிடைக்கும் | | 00 |
| | | 3.4.2 | பொது போக்குவரத்து வசதிகள் 01 - 04 தடவை வரை மட்டுமே கிடைக்கும் | | 02 |
| | | 3.4.3 | பொது போக்குவரத்து வசதிகள் 01 தடவை மட்டுமே கிடைக்கும் | | 03 |
| | | 3.4.4 | பொது போக்குவரத்து வசதிகள் இல்லாமை | | 05 |
| 4. | பாடசாலையிலிருந்து அடிப்படை வசதிகளை பெறும் இடத்துக்கு காணப்படும் தூரம் குறித்த தகவல் | | | | 13 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4.1 | அண்மித்த அரச வைத்தியசாலைக்கான தூரம் (ஆதார/ பிரதேச வைத்தியசாலை அல்லது அதற்கு மேலான வசதிகளுடனான வைத்தியசாலையாக வேண்டும்) | | (07) |
| | | 4.1.1 | பாடசாலையிலிருந்து தூரம் கி.மீ 1 க்கும் குறைவானது | 00 |
| | | 4.1.2 | பாடசாலையிலிருந்து தூரம் கி.மீ 1க்கும் கி.மீ 2 க்கும் இடையில் | 01 |
| | | 4.1.3 | பாடசாலையிலிருந்து தூரம் கி.மீ 2 கி.மீ 4 க்கு இடையில் | 03 |
| | | 4.1.4 | பாடசாலையிலிருந்து தூரம் கி.மீ 4 கி.மீ 6 க்கு இடையில் | 05 |
| | | 4.1.5 | பாடசாலையிலிருந்து தூரம் 6 கி.மீ.க்கும் அதிகமாக உள்ளது. | 07 |
| | 4.2 | அண்மித்த அரச/தனியார் வங்கிக் கிளைக்கான தூரம் (வணிக அல்லது சேமிப்பு வங்கிகள் மட்டும்) | | (05) |
| | | 4.2.1 | பாடசாலையிலிருந்து தூரம் கி.மீ 1 க்கும் குறைவானது | 00 |
| | | 4.2.2 | பாடசாலையிலிருந்து தூரம் கி.மீ 1க்கும் கி.மீ 2 க்கும் இடையில் | 02 |
| | | 4.2.3 | பாடசாலையிலிருந்து தூரம் கி.மீ 2 கி.மீ 4 க்கு இடையில் | 03 |
| | | 4.2.4 | பாடசாலையிலிருந்து தூரம் கி.மீ 4 கி.மீ 6 க்கு இடையில் | 04 |
| | | 4.2.5 | பாடசாலையிலிருந்து தூரம் 6 கி.மீ.க்கும் அதிகமாக உள்ளது | 05 |
| 5. | **வேறு பாடசாலைகளுக்கான தூரம் (ஒரே மொழிமூலம் மற்றும் அதே தரங்களுடன்)** | | | **08** |
| | | 5.1 | பாடசாலையிலிருந்து கி.மீ. 2க்கும் குறைவான தூரத்தில் பாடசாலை/பாடசாலைகள் அமைந்திருத்தல் | 00 |
| | | 5.2 | பாடசாலையிலிருந்து கி.மீ. 2 கி.மீ. 4க்கும் குறைவான தூரத்தில் பாடசாலை/பாடசாலைகள் அமைந்திருத்தல் | 02 |
| | | 5.3 | பாடசாலையிலிருந்து கி.மீ. 4வது கி.மீ. 6க்கும் குறைவான தூரத்தில் பாடசாலை/பாடசாலைகள் அமைந்திருத்தல் | 06 |
| | | 5.4 | பாடசாலையிலிருந்து கி.மீ. 6 அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்தில் பாடசாலை/பாடசாலைகள் அமைந்திருத்தல் | 08 |
| | **பொதுவான நியதிகளுக்கான மொத்த புள்ளிகள்** | | | 80 |
| 6. | **மாகாண மட்டக் குழுவால் பிரதேச வாரியாக இனங்காணப்பட்ட புவியியல் மற்றும் சமூக இடர்பாடுகள் தொடர்பான நியதிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகள் மூ** | | | 20 |
| | **மொத்த புள்ளிகள்** | | | 100 |

**அட்டவணை இலக்கம் 1 – புள்ளி வழங்கும் நியதி**

மூ 6.1 இல் மாகாண மட்டத்தில் குழுவினால் எவ்வாறு தங்கள் பிரதேசத்தில் புவியியல் மற்றும் சமூக இடர்பாடுகளுக்குரிய நியதிகளை இனங்காண வேண்டிய விதம் குறித்து 6.1 இல் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

**6.0 பாடசாலைகளை வகைப்படுத்தல்**

6.1 மாகாணத்தின் தனித்துவத்துக்குரிய நியதிகளை இனங்காணல்

6.1.1 மாகாணக் கல்விச் செயலாளரால் தனது மாகாணத்தின் தனித்தன்மைக்கு பொருத்தமான நியதிகளை இனங்காண மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் ஏழு பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென்பதோடு அந்தக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு அமைய வேண்டும்.

i. மாகாண கல்விப் பணிப்பாளர் (தலைவர்)
ii. மாகாண கல்வி செயலாளரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
iii. மாகாணக் கல்வித் திணைக்கள திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்
iv. இரண்டு வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
iv. இரண்டு கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்

6.1.2 குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் கீழ் உள்ள கோட்டங்களின் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படக் கூடாது.

6.1.3 பாடசாலைகளை வகைப்படுத்துவதற்கான தேசிய மட்டத்தில் கருத்திற் கொள்ளப்படும் நியதிகளுக்கு மேலதிகமாக தங்கள் மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் இடர்பாடுகளை சரியாக பிரதிபலிக்கும் வகையில் 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள இலக்கம் 6 தொடர்பாக தங்கள் மாகாணத்திற்கு தனித்துவமான 4 - 7 வரையிலான நியதிகளை அடையாளம் காண மேலே குறிப்பிட்ட மாகாண குழுவினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்படி மாகாணக் குழுவினால் பொருத்தமானது என இனங்காணப்பட்ட நியதிகளை கல்விச் செயலாளரால் சமர்ப்பித்து அனுமதி பெற மாகாண பணிப்பாளரினால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அத்தகைய அனுமதியைப் பெற்ற பிறகு மேலே உள்ள இலக்கம் 5.1 அட்டவணையிலுள்ள 1ம் அட்டவணைக்கு அமைய புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

## 6.2 பாடசாலைகளுக்கான புள்ளிகள் வழங்கல்

6.2.1 இதற்காக 5.1 அட்டவணையிலுள்ள 1ம் அட்டவணையில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் தமது மாகாண குழுவினால் முன்வைக்கப்பட்ட கல்வி செயலாளரின் அனுமதி பெற்ற நியதிகளை பயன்படுத்தி தமது வலயத்துக்குரிய அனைத்து அனைத்து பாடசாலைகளுக்கும் பின்வரும் அறிவுறுத்தல்களின்படி புள்ளிகள் வழங்க தமது வலயத்தின் திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி பணிப்பாளர்களின் உதவியுடன் வலயக் கல்வி பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

i. தமது வலயத்துக்குரிய ஒவ்வொரு பாடசாலைக்கும் பாடசாலை வகைப்படுத்தலோடு தொடர்பான நியதிகளுக்கேற்ப புள்ளிகள் வழங்கப்பட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் மொத்த புள்ளிகள் கணக்கிடப்பட வேண்டும்.

ii. இவ்வாறு, வலயத்தின் அனைத்து பாடசாலைகளுக்கும் ஒவ்வொரு நியதிக்குமரியதாக வழங்கப்பட்ட புள்ளிகள் இணைப்பு 1 இன் மாதிரிக்குள் உள்ளிடப்பட்டு, பாடசாலையின் மொத்த புள்ளிக்கேற்ப அனைத்து பாடசாலைகளும் இறங்கு வரிசையில் (அதிக பெறுமதியிலிருந்து குறைந்த பெறுமதி வரை) வரிசைப்படுத்தப்பட்டு அந்த பாடசாலை ஆவணங்கள் 6.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண மட்டத்திலான குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iii. மாகாண மட்டக் குழுவினால் தங்கள் மாகாணத்தில் உள்ள அனைத்து வலயங்களின் பாடசாலை பட்டியலை பரிசீலித்து புள்ளிகள் சரியாக வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

iv. மாகாணக் கல்விப் பணிப்பாளர் தனது மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஒவ்வொரு நியதி தொடர்பாக வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் மொத்த புள்ளிகளை இணைப்பு 1 மாதிரியில் உள்ளடக்கி, மாகாண மட்டக் குழு மற்றும் மாகாணக் கல்வி செயலாளர் பரிந்துரையுடன் பாடசாலை பட்டியலை கல்விச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

## 6.3 ஒவ்வொரு வகை பாடசாலைகளுக்கும் வெட்டுப்புள்ளிகளை நிர்ணயித்தல்

6.3.1 நாட்டின் அனைத்து பாடசாலைகளினதும் புள்ளிகளை பகுப்பாய்வு செய்து ஒவ்வொரு பாடசாலை வகையை நிர்ணயிக்கும் இழிவளவான வெட்டுப்புள்ளியை தீர்மானித்தல் கல்விச் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6.3.2 அந்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் அதிகஷ்ட பாடசாலைகள், கஷ்டப் பாடசாலைகள், வசதியான பாடசாலைகள் மற்றும் மிகவும் வசதியான பாடசாலைகள் என வகைப்படுத்தப்பட்ட பாடசாலை பட்டியல் கல்வி செயலாளரினால் வெளியிடப்படும். இந்தப் பாடசாலை பட்டியல் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை இற்றைப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**6.4 கால சட்டகம்**

6.4.1 பாடசாலைகளின் பட்டியலைத் தயாரித்து வெளியிடும் செயற்பாடுகள் கீழே உள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்ட கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| செயற்பாடு | காலப்பகுதி | பொறுப்பு |
|---|---|---|
| 1. மாகாணத்திற்குத் தனித்தன்மை வாய்ந்த நியதிகளை கண்டறிந்து, மாகாண மட்டக் குழுவின் அனுமதிக்கு சமர்ப்பித்தல் | மார்ச் 06, 2024க்கு முன் | மாகாண கல்விப் பணிப்பாளர் |
| 2. மாகாண மட்டத்திலான நியதிகளுக்கு கல்விச் செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ளல் | மார்ச் 26, 2024க்கு முன் | கல்வி பணிப்பாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்) |
| 3. வலயத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்கும் புள்ளிகள், ஆவணங்களைத் தயாரித்து மாகாண மட்ட குழுவிடம் அனுமதிக்கு சமர்ப்பித்தல் | மே 03, 2024க்கு முன் | வலயக் கல்விப் பணிப்பாளர் |
| 4. மாகாண மட்டக் குழு, இணைப்பு 1 இல் உள்ள மாதிரியின்படி பாடசாலை பட்டியலை தயாரித்து கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்தல் | மே 22, 2024க்கு முன் | மாகாண கல்விப் பணிப்பாளர் |
| 5. கல்விச் செயலாளர் நியமிக்கும் குழு, 9 மாகாணங்களின் பாடசாலை பட்டியலை மீளாய்வு செய்து, ஒவ்வொரு பாடசாலை வகைக்கும் வெட்டுப் புள்ளிகளை அறிவித்தல். | ஜுன் 26, 2024க்கு முன் | கல்வி பணிப்பாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்) |
| 6. வெட்டுப்புள்ளியின்படி தயாரிக்கப்பட்ட பாடசாலை பட்டியலை மாகாணங்களுக்கு வழங்குதல் | ஜுலை 10, 2024க்கு முன் | கல்வி பணிப்பாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்) |

**அட்டவணை இலக்கம் 2 – காலப்பகுதி**

இது தொடர்பாக இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் கல்வி செயலாளர் சார்ந்தது.

ஒப்பம்/ வசந்தா பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி:

1. செயலாளர், நிதி அமைச்சு
2. தலைவர், நிதி ஆணைக்கழு
3. கணக்காய்வாளர் நாயகம் நாயகம்
4. அனைத்து மேலதிக செயலாளர்கள், கல்வி அமைச்சு
5. ஆணையர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
6. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம்
7. பணிப்பாளர நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
8. பிரதம நிதி அதிகாரி, கல்வி அமைச்சு
9. அனைத்து கல்வி பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு
10. உள்ளக கணக்காய்வாளர், கல்வி அமைச்சு

இணைப்பு01

பாடசாலை பட்டியலில் மதிப்பெண்கள் புள்ளிகள் உள்ளிட்ட நியதிகள் ..........................................-மாகாணம்.

| தொடர் இலக்கம் | பாடசாலை தொகை கணக்கெடுப்பு இலக்கம் | பாடசாலையின் பெயர் | மாகாணம் | வலயம் | கோட்டம் | 1.1 | 1.2 | 1.3 | 1.4 | 1.5 | 2.1.1 | 2.1.2 | 2.2.1 | 2.2.2 | 3.1 | 3.2 | 3.3 | 3.4 | 4.1 | 4.2 | 5 | 6.1 | 6.2 | 6.3 | 6.4 | 6.5 | 6.6 | 6.7 | மொத்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

மேற்கூறிய பாடசாலைகளுக்கு துல்லியமாக புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை இதன் மூலம் உறுதி கூறுகின்றோம்

குழு உறுப்பினரின் பெயர் பதவி கையொப்பம் முத்திரை

.1
.2
.3
.4
.5
.6
.7

மேலே குறிப்பிட்டுள்ள பாடசாலை பட்டியல் எனது பரிந்துரையுடன் இதன்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

கையொப்பம்............................................................................................ பதவி முத்திரை

மாகாண கல்வி செயலாளர்

மாகாண கல்வி அமைச்சு

..........................மாகாணம்

தேதி...........................................................